# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 209 | 4 Pages | 1.3.2024 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 209 | 4 பக்கங்கள் | 1.3.2024 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## திமுக கூட்டணியில் காங்கிரசுக்கு கவுரவமான தொகுதிகள் கிடைக்கும்: செல்வபெருந்தகை



சென்னை, மார்ச். 1

பாராளுமன்ற தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் காங்கிரசுக்கு ஒதுக்கப்படும் தொகுதிகள் எத்தனை? என்பது இன்னும் முடிவாகாமலேயே உள்ளது.

இது தொடர்பாக தி.மு.க.வுடன் தமிழக காங்கிரசார் நடத்திய பேச்சுவார்த்தையில் சுமூக உடன்பாடு ஏற்படவில்லை.

இதைத்தொடர்ந்து தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வபெருந்தகை, சட்டமன்ற கட்சி தலைவர் ராஜேஸ்குமார் ஆகியோர் டெல்லிக்கு புறப்பட்டு சென்றனர்.

காங்கிரஸ் மேலிட தலைவர்களின் அழைப்பை ஏற்று டெல்லிக்கு பயணமான இருவரும் தமிழக அரசியல் நிலவரம் பற்றியும், தொகுதி பங்கீட்டு பேச்சுவார்த்தையின்போது நடந்த விஷயங்கள் குறித்தும் எடுத்துக் கூறினார்கள்.

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜூன கார்கே மற்றும் மேலிட தலைவர்களுடன் ஆலோசனை நடத்திய பின்னர் இருவரும் சென்னை திரும்பினார்கள்.

தொகுதி பங்கீடு தொடர்பாக செல்வபெருந்தகையிடம் கேட்டபோது அவர் கூறியதாவது:

தேர்தல் நேரத்தில் கூட்டணி பேச்சுவார்த்தைகளின்போது இதுபோன்று காலதாமதம் ஏற்படுவது இயல்புதான். எத்தனை தொகுதிகளில் போட்டியிடுவது? எந்தெந்த இடங்களில் களம் காண்பது என்பது பற்றியெல்லாம் தி.மு.க. தலைமையுடன் டெல்லி மேலிட தலைவர்கள் தொடர்ந்து பேசி வருகிறார்கள்.

இந்த பேச்சுவார்த்தையில் விரைவில் சுமூக உடன்பாடு எட்டப்படும்.

காங்கிரசுக்கு கவுரவமான தொகுதிகளை தி.மு.க. தலைமை ஒதுக்கி தரும் என்கிற நம்பிக்கை உள்ளது.

இவ்வாறு செல்வ பெருந்தகை கூறினார்.










# பெரும்பாறை அருகே பிரமாண்ட பூப் புனித நீராட்டு விழா



திண்டுக்கல் மார்ச் 1

திண்டுக்கல் மாவட்டம் பெரும்பாறை அருகே கொடைக்கானல் கீழ் மழை பகுதியான கே சி பபட்டி கிராமத்தைச்சேர்ந்தவர் ஐயப்பன். மாவட்ட மர வியாபார சங்கத் தலைவர், மற்றும் விவசாய நல சங்க தலைவர் ஆன இவர் மண்ணின் மரபைக் காத்து தாய்மாமன் சீர் தலை சுற்ற வைத்த ஊர்வலம் மலை கிராம மக்களை வியக்க வைத்த பூ புனித நீராட்டு விழா தமிழகத்தின் பாரம்பரியமான தென் மாவட்டத்தின் உயிர் மூச்சு என்று சொல்லப்படும் தாய்க்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் தருகிறோமோ அதே அளவிற்கு தாய் மாமனுக்கு தரப்படுவது வழக்கம். எவ்வளவு பிரச்சனைகள் இருந்தாலும் தனது அக்கா குழந்தைகள் தங்கச்சி குழந்தைகளுக்கு எந்த விசேஷங்கள் என்றாலும் தாய்மாமன் தன்னால் முடிந்த அளவு அனைவரையும் வியக்க வைக்க வகையிலும் நான் இருக்கிறேன் பயப்பட வேண்டாம் எனக் கூறி விழாக்களில் செய்முறைகளோடு வந்து நிற்பது வழக்கம். அதேபோல் தாய்மாமனுக்கு உரிய அங்கீகாரமும் வழங்கப்படும். அதேபோன்று தனது தங்கை மகள் தீப அக்க்ஷயாவுக்குபூப்புனிதநீராட்டு விழா அக்ராமத்தில் மிகப் பிரமாண்டமாக நடைபெற்றது. விழாவில் முக்கிய பங்கு வகிக்கும் தாய் மாமன்கள் சுமார் 3 கிலோ மீட்டர் தூரத்தில் இருந்து தனது தங்கை மகளை குதிரை பூட்டிய சாரட் வண்டியில் அழைத்துக் கொண்டு வாழை. மாதுளை. திராட்சை உள்ளிட்ட வைகளும் அனைத்து வகை மிட்டாய்கள், அரிசி, பருப்பு மற்றும் இனிப்பு வகைகள் என சுமார் நூற்றுக்கணக்கான வகைகளை தங்கள் தலைகளில் சுமந்தும், குறிப்பிட்ட அளவிற்கு மேல் உள்ளவைகளை லாரியில் அடிக்கியும் மேளதாளம் முழங்க கேரளாசெண்டைமேளம், கேரளா பாரம்பரிய நடனம் என மலை கிராமத்தையே வியக்க வைக்கும் வகையில் சீர்வரிசை எடுத்து தனது மருமகளையும் அழைத்துக் கொண்டு விழா நடக்கும் பந்தலை நோக்கி வந்தார். மேலும் இந்த விழாவில் மலை கிராம மக்கள், மற்றும் ஆதிவாசி மக்கள் மலைபகுதியில் விலையும் மலைவாழை, மலைத் தேன், மலைக்காய்கறிகள் உள்ளிட்ட பொருட்களை தங்களது சீராக கொண்டு வந்தனர். மலை கிராம மக்கள் இன்னும் யாரும் மாறவில்லை அனைவரும் ஒற்றுமையாக உள்ளார்கள் என்றும் மலையையே வியக்க வைத்த விழாவாகவும் அமைந்து இருந்தது.

# விக்கிரவாண்டி தஞ்சாவூர் வி கே டி சாலையை சீரமைக்கும் போராட்டம்

பண்ருட்டி மார்ச் 1

கடலூர் மாவட்டம் விக்கிரவாண்டி தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலை பண்ருட்டி அருகே திருமால் நகர் அருகே வணிகர் பேரவை மாவட்ட செயலாளர் வீரப்பன் முன்னிலையில் நிர்வாகிகள் மற்றும்லாரிஉரிமையாளர்கள் பொதுமக்கள் ஒன்றிணைந்து சீரமைக்கும் போராட்டத்தில் ஈடுபட்டனர். இச்சாலையை விரைவாக வேலைகளை முடிக்காமல் காலம் தாழ்த்தி



வருவதால் இச்சாலையில் மிகப்பெரிய குழிகள் உள்ளதால் வாகன ஓட்டிகள் விபத்துக்குள்ளாகி உயிர் பலியாகி உள்ளனர். அதனால் குழிகள் உள்ள இடத்தில் ஜல்லி கற்களை கொண்டு அவைகளை நிரப்பி சாலையை சீரமைத்தனர்.

இன்னும் சில தினங்களுக்குள் நெடுஞ்சாலைத் துறையினர் பொது மக்களின் பிரச்சனையை கருத்தில் கொண்டு உடனடியாக சீரமைக்க வில்லை என்றால் பண்ருட்டி வட்டாச்சியர் அலுவலகம் முன்பு போராட்டம் நடத்தப்படும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளனர்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையத்தில் தோட்டக்கலை துறை சார்பில் ரூபாய் 1.50லட்சம் மதிப்பீட்டில் நடமாடும் காய்கறி வண்டிகளை ஐந்து பேருக்கு சென்று ஒன்றிய குழு பெருந்தலைவர் விஜயகுமார் வழங்கினார் உடல் தோட்டக்கலைத் துறை வட்டார உதவி இயக்குனர் சுகந்தி கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்

# கடலூரில் வருவாய்துறை அலுவலர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்

கடலூர்.மார்ச் 1

தமிழ்நாடு வருவாய் துறை பதவி உயர்வு அலுவலர் சங்கத்தின் சார்பில் மாநிலம் தழுவிய மாலை நேர ஆர்ப்பாட்டம் கடலூரில் நடைபெற்றது. இதற்கு மாவட்ட செயலாளர் ஆனந்தி தலைமை தாங்கினார். மாவட்ட துணைத் தலைவர் வளர்மதி விளக்க உரையாற்றினார், மாநில துணைத் தலைவர் கமல்ராஜ் சிறப்புரை ஆற்றினார், இக்கூட்டத்தில் தமிழ்நாடு அரசு உணவு பாதுகாப்பு அலுவலர் சங்கத்தின் மாநில துணைத் தலைவர் நல்ல தம்பி, தமிழ்நாடு அரசு நுண்கதிர் தொழில்நுட்ப பணியாளர் சங்கத்தின் மாநில தலைவர சுந்தர்ராஜா, கடலூர் மாவட்ட முன்னாள் தலைவர் குணசேகரன், கடலூர் மாவட்ட தலைவர் தனசேகரன், தமிழ்நாடு வருவாய் துறை கிராம அலுவலர் சங்கத்தின் கடலூர் மாவட்ட தலைவர் ரவி, மாவட்ட செயலாளர் ஜெயராமன் உள்ளிட்ட பலரும் வாழ்த்துறை வழங்கினார்கள், தமிழ்நாடு வருவாய்த்துறை பதவி உயர்வு அலுவலர் சங்க மாவட்ட பொருளாளர் உமாமகேஸ்வரி நன்றி கூறினார், இதில் பழைய ஓய்வுதிய திட்டத்தையே நடைமுறைப்படுத்த வேண்டும், வருவாய் துறையில் பதவி உயர்வு பெற்ற கிராம நிர்வாக அலுவலர்களுக்கு உதவியாளர் நிலையில் தமிழ்நாடு அரசு பணியா





ளர் ( பணி நிபந்தனைகள் )சட்டம் 14/2016ல் பிரிவு 40(2)ன் படி பணியேற்ற நாளின் அடிப்படையில் முதுநிலை நிர்ணயம் செய்திட வேண்டும்,

முதுநிலை தொடர்பான குழப்பத்திற்கு தீர்வு காண மாநில அளவிலான முதுநிலை முறையினை கடைபிடித்ததிட வேண்டும், உள்ளிட்ட கோரிக்கைகளைவலியுறுத்தி வருகிற நாளை மறுநாள் வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகம் முன்பு மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள் கண்களைக் கட்டி, வாயினை மூடி, கைகளைக் கட்டி தமிழகம் முழுவதும் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் உண்ணாவிரதம் நடத்துவது, உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# பாரதிய ஜனதா கட்சியின் திருப்பூர் மாவட்டத் தலைவர் செந்தில்வேல்க்கு உள்ளாட்சி மேம்பாட்டு பிரிவு மாவட்ட தலைவர் முனீஸ்வர பாண்டியன் மாலை அணிவித்து வாழ்த்து

திருப்பூர், மார்ச்.1

என் மண் என் மக்கள் பாதையாத்திரை நிறைவு வெற்றி விழா மாநாட்டினை வரலாற்று சிறப்புமிக்க வெற்றி மாநாடாக மாற்றியமைத்த திருப்பூர் வடக்கு மாவட்ட தலைவர் செந்தில்வேல் அவர்களுக்கும் மாவட்ட பொதுச் செயலாளர்களுக்கும் மாவட்ட துணைத் தலைவர்கள் மாநில அணி பிரிவு நிர்வாகிகள் மண்



டல தலைவர்களுக்கும் என அனைவருக்கும் உள்ளாட்சி மேம்பாட்டு பிரிவு சார்பாக மாவட்ட தலைவர்செந்தில் வேல் அவர்களை சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்தி சிறப்பித்த போது

இந்த நிகழ்வில் மாவட்டத் தலைவர் முனீஸ்வரா R.பாண்டியராஜாமாவட்ட செயலாளர் முருக பாண்டி அங்கேரிபாளையம் மண்டல் தலைவர் ஆர் வீரகுமார் நெருப்பெரிச்சல் மண்டல தலைவர் க.சிவன்ராஜ் மண்டல செயலாளர் அ .மருத முத்து ஆகியோர் உடன் இருந்தனர்

# ராகுல் திருமா, கொள்கைக் கூட்டணியை சிதைக்காதீர் வன்னியரசுக்கு காங்கிரஸ் தேசிய செயலாளர் கண்டனம்



கடலூர் . மார்ச் 1

கடலூரில் வன்னி அரசுக்கு காங்கிரஸ் தேசிய தலைவர் கண்டன அறிக்கை வெளியிட்டுள்ளார். அந்த கண்டன அறிக்கையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணைப்பொதுச் செயலாளர் சகோதரர் வன்னியரசு அவர்களுக்கு, இந்திய தேசிய காங்கிரஸின்ராஜீவ் காந்தி பஞ்சாயத்து ராஜ் சங்கதன் தேசிய செயலாளர், கடலூர் க.ரமேஷ் ன் கடிதம்.தங்களின் தகவல் குறித்தத பல மேடைப் பேச்சுக்களில் உள்ளம் வீறு கொண்ட பலர், என்னோடு உற்ற நண்பர்களாக இருக்கிறார்கள். இரண்டொருகூட்டங்களில் யானும் தங்களோடு கலந்து கொண்டிருக்கிறேன். அச்சமயத்தில் தங்களின் கவனமென்பது நான் பயணிக்கும் காங்கிரஸ் கட்சியின் மீதான மரியாதை என்பதையும் அறிவேன். தற்போது தமிழ்நாடு காங்கிரசின் புதிய தலைவராக கு. செல்வப் பெருந்தகை அவர்களை, காங்கிரஸ் கட்சி மேலிடம் அறிவித்திருக்கிறது. கு.செல்வப்பெருந்தகை மேநாள் வி.சி.க.வின் இரண்டாம் கட்ட தலைவர்களில் ஒருவர் என்பதும் பலர் அறிந்ததே. அச்சமயத்தில் தங்களுக்கும் செல்வப் பெருந்தகை அவர்களுக்கும் சில கருத்துமுரண்கள் இருந்திருக்கலாமெனப் படுகிறது. இரண்டொரு தினங்களுக்கு முன்பாக தாங்கள் காங்கிரஸ் கட்சியின் மீது சில கழிவுச்சொற்களை அள்ளித் தெளித்திருக்கிறீர்கள். செல்வப்பெருந்தகை மீதான காழ்ப்புணர்ச்சியை, அவரின் வளர்ச்சிப் படியுயரம் தாளாமல், அவர் சார்ந்த இயக்கத்தின் மீது சாபமாக திணித்திருக்கிறீர் என்றே கருத முடிகிறது. இது நாகரிகமற்ற அரசியலின் நான் காம்தர செயலேயாகும். இது எங்களுக்கான புதிய வசை மொழி அல்ல. இப்படியான இழித்துரைத்தலும் காந்தியவாதிகளுக்கு சகிப்பைத் தருமென நம்பியிருக்கிறீர்கள். தேசத்திற்காக உயிரையும் பொருட்படுத்தாதவர்கள், சாவர்க்கரின் வழியில் தன் மானத்தையும் இழக்கும் கோழைகளல்ல நாங்கள் என்பதையும் நம்புவீராக !! கூட்டணி அமைப்பிற்குள் குந்தகம் வார்க்கும் தங்களின் இம்முயற்சி ஆரோக்கியமானதல்ல. தமிழ்நாட்டில் 50 ஆண்டுகளுக்கு முன் காங்கிரஸ் கட்சி வீழ்ந்த பிறகு பிறந்தவர்களே சரிபாதியாய் இன்றும்காங்கிரசில்இணைந்து பயணிக்கிறோம். தேர்தல் வெற்றியே தேசத்தின் வெற்றி ஆகாது எனும் பயிற்சி பெற்றவர்களாய் தொடர்ந்து களமாடுகிறோம். வி.சி.க.கட்சியின் தலைவர் திருமா தனது பெயருக் கேற்றவாறே மாபெரும் திருவுக்கு உரியவர் என்பதை நடுநிலையாளர்கள் எவரும் மறுப்பதற்கில்லை. மனசாட்சி உள்ள எதிரிகளும் உள்ளூர இதனை ஏற்கிறார்கள் என்பதே உண்மை. அதற்கு அவருடைய கருத்தியல் சார்ந்த அரசியல் முன்னெடுப்பே அரணாக துணை நிற்கிறது எனலாம். விடுதலைச் சிறுத்தைகள் எனும் கட்சியை கட்டியெழுப்ப திறன்மிகு சகோதரர் திருமா சிந்தை தான் அடிக்கல், சுவர், தளம் என யாவுமாக இருக்கிறது. அவரே யாவுமாக இருக்கிறார், இருந்தார், இருப்பார் என்பேன். அவரது ஓய்வில்லா உழைப்பின் தியாகம் அவ்வளவு அளப்பரியது. தலைவர் ராகுல்காந்தி அவர்கள் சித்தாந்த அடிப்படையில் நாட்டை சமன் படுத்த இயங்குகிறார் என்பதனை மறந்தவராக தாங்கள்தங்கள்சிந்தையை குறுக்கிக் கொள்ளக் கூடாது என வேண்டுகிறேன். காங்கிரஸ் கட்சியின் இலக்கினை 100 மீ. ஓட்டப்பந்தயத்தின் வெற்றியாக கருதிவிட முடியாது. மாறாக மிக நீண்ட மாரத்தான் ஓட்டமாகும் என்பதை அறிக. தேசத்தின் பிரதான எதிரியாம் பாசிசத்தை வீழ்த்திடப் போரிடும் மிக நீண்ட களத்தில் தாங்கள் குறுக்குசால் ஓட்டிட முனைவது எதிரிக்கு கூர்வாளினை மறைமுகப் பரிசாக தூக்கிக்கொடுப்பதனைப் போலாகும். விசிக என்பது திருமா வியர்வை சிந்திய கட்சியாகும். அவரது கண்ணாடி மாளிகையில் நின்று கொண்டு கொள்கைகள் மீதே கல்லெறிவதால் தங்களுக்கு நட்டம் ஏதுமில்லாமல் இருக்கலாம். கட்டியெழுப்பியவருக்குத் தான் களங்கம் என்பதை உணருங்கள். திருமா கருத்தியல் முனைப்பு, தமிழகத்தையும் தாண்டி இந்தியக் கூட்டணிக்கு வலு சேர்ப்பதை, நீர்த்துப்போகச் செய்வது சங்கித்தனமென சமூகம் தங்களை எண்ணிடக்கூடாது என்பதே என்னைப் போன்றோரின் வருத்தம்.50 ஆண்டுகால தமிழக காங்கிரசின் பின்னடைவுக்கு வருந்த வேண்டிய நிலை எங்களுக்கில்லை. ஏனெனில், கர்மவீரர் காமராஜரையே புறக்கணித்த நாட்டில், அவரைவிட சிறந்த நிர்வாகியை கொண்டு வராமல், அரசியல் ஆரோக்கியமின்றி இருப்பது யார் குற்றம். இங்கே,காங்கிரஸ் கட்சி டெபாசிட் வாங்கட்டும் அல்லது வாங்காமல் போகட்டும். இங்கே கூட்டணியின்றி சோபிக்கும் திறன் புதியக்கட்சிகளுக்கும் எட்டாக்கனியன்றோ. தாழ்ந்த தரத்தில் விமர்சனங்கள் எதற்கு, அதுவும் காழ்ப்புணர்ச்சி சார்ந்து இருப்பினும், தாங்கள் நான் சார்ந்த தொகுதியில், இந்தியக் கூட்டணியில் போட்டியிட நேர்ந்தால் தார்மிக அடிப்படையில் என் ஓட்டு திரு வன்னியரசுக்குத்தான் தவறாமல் விழும் என்பதில்மாற்று நிலை இல்லை ! தேர்தல் வெற்றியே தேசத்தின் வெற்றி ஆகாது எனும் பயிற்சியைப் பெற்றவர்களாய் தொடர்ந்து களமாடுவோம். என அந்த கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

# பாரதிய ஜனதா கட்சி விழுப்புரம் கடலூர் ஒருங்கிணைந்த மாவட்டத்தின் ஆலோசனைக் கூட்டம்







கடலூர் .மார்ச் .1.

விழுப்புரம் கடலூர் ஒருங்கிணைந்த மாவட்டத்தின் ஆலோசனைக் கூட்டம் பாரத பிரதமர் நரேந்திர மோடி வரும் மார்ச் 4 ஆம் தேதி வருகைக்கு பெரும் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தி மாவட்ட தலைவர் கலிவரதன்தலைமையில் விழுப்புரம் வடக்கு மாவட்ட தலைவர் ராஜேந்திரன் கடலூர் கிழக்கு மாவட்ட தலைவர் மணிகண்டன் கடலூர் மேற்கு மாவட்ட தலைவர் மருது மாவட்ட பொது செயலாளர் முரளி தங்கம் பொருளாளர் குமாரசாமி மாநில செயற்குழு உறுப்பினர் தியாகராஜன் முன்னிலையில் மாநில செயலாளர் விழுப்புரம் பெருங்கோட்ட பொறுப்பாளர் வினோஜ் பி செல்வம் ஆலோசனை வழங்கினார்.

# ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியையை கட்டிப்போட்டு கொள்ளை

வடவள்ளி, மார்ச். 1

கோவை வேடப்பட்டி அருகே உள்ள குரும்பபாளையம் டீச்சர்ஸ் காலனி பகுதியை சேர்ந்தவர் விஜயலட்சுமி (வயது 70). அரசுப்பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். இவருக்கு திருமணம் ஆகவில்லை.

இந்த நிலையில் விஜயலட்சுமி நேற்று இரவு காற்றுக்காக வீட்டின் பின்பக்க கதவை திறந்து வைத்து விட்டு, ஹாலில் உட்கார்ந்து சாப்பிட்டு கொண்டு இருந்தார். அப்போது அடையாளம் தெரியாத 2 பேர் கும்பல் பின்பக்கம் வழியாக வீட்டுக்குள் புகுந்தனர்.

அவர்களை பார்த்து அதிர்ச்சி அடைந்த விஜயலட்சுமி, நீங்கள்யார்என்று கேட்டார். தொடர்ந்து அவர் கூச்சல் போட்டு பக்கத்து வீட்டினரை உதவிக்கு அழைக்க முயன்றார்.அப்போதுகொள்ளை கும்பல் அவரது வாயை பொத்தி அங்கிருந்த சேரில் கட்டிப்போட்டனர்.

பின்னர் விஜயலட்சுமி அணிந்திருந்த 6 பவுன் தங்கச்சங்கிலி, 4 பவுன் தங்க வளையல்கள் மற்றும் 3/4 பவுன் மோதிரம் ஆகியவற்றை பறித்துக்கொண்டனர். தொடர்ந்து அவர்கள் பீரோவில் பணம், நகை எதுவும் உள்ளதா என்று கேட்டனர்.

மேலும் விஜயலட்சுமியை மிரட்டி பீரோவின் சாவியை எடுத்துக்கொண்டனர். பின்னர் கொள்ளையர்கள் பீரோவை திறந்து லாக்கரில் இருந்த பணம், நகைகளை ஒட்டுமொத்தமாக கொள்ளையடித்தனர். தொடர்ந்து அவர்கள் கொள்ளையடித்த பணம், நகைகளுடன் வீட்டின் பின்பக்க வாசல் வழியாக தப்பி சென்று விட்டனர்.

அதன்பிறகு மூதாட்டி விஜயலட்சுமி காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள் என கூச்சல் போட்டார். இதனை கேட்ட அக்கம் பக்கத்தினர் திரண்டு வந்தனர். பின்னர் சேரில் கட்டப்பட்ட நிலையில் இருந்த விஜயலட்சுமியை விடுவித்து விசாரித்தனர். அப்போதுதான் 2 பேர் கும்பல் வீட்டின் பின்பக்கவாசல் வழியாக வீட்டுக்குள் புகுந்து கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்ட விவரம் தெரிய வந்தது.

இதுதொடர்பாக தொண்டாமுத்தூர் போலீசுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. தகவலின்பேரில் பேரூர் சரக போலீஸ் டி.எஸ்.பி வெற்றிசெல்வன், தொண்டாமுத்தூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் வடிவேல் குமார் தலைமையில் போலீசார் நேரில் சென்று விசாரணை நடத்தினர்.

தொடர்ந்து போலீசார் டீச்சர்ஸ் காலனி பகுதியில் பொருத்தப்பட்டு உள்ள கண்காணிப்பு கேமராவை கைப்பற்றி அவற்றில் இடம்பெற்று உள்ள காட்சிப்பதிவுகளை ஆய்வு செய்து பார்த்தனர்.

இதில் அடையாளம் தெரியாத 2 பேர் கும்பல் மோட்டார்சைக்கிளில் டீச்சர்ஸ் காலனிக்கு வருவதும்,பின்னர்விஜயலட்சுமி வீட்டின் பின்பக்க பகுதிக்கு நைசாக சுவரேறி குதித்து செல்வதும் தெரிய வந்தது.அதாவதுமூதாட்டி வீட்டு வளாகத்துக்குள் சுமார் 7.45 மணியளவில் புகுந்த கொள்ளை கும்பல் அங்கு சாவகாசமாக உட்கார்ந்து மதுஅருந்தியது. பின்னர் அவர்கள் மதுபோதையுடன் வீட்டுக்குள் புகுந்து தனியாக இருந்த வீஜயலட்சுமி வீட்டுக்குள் கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்டது தெரியவந்து உள்ளது. ஆசிரியை வீட்டில் மொத்தம் 25 பவுன் நகைகள் கொள்ளை போனதாக கூறப்படு கிறது. கொள்ளையர்களை பிடிக்க தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது.

# தி.மு.க.காங்கிரஸ் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தையில் எதிர்பாராத தேக்கம்



சென்னை, மார்ச். 1

பாராளுமன்ற தேர்தலில் தமிழ்நாட்டில் தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணியில் காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், ம.தி.மு.க. மற்றும் இடது சாரி கட்சிகள் பிரதானமாக இடம் பிடித்துள்ளன.

இந்த கூட்டணியில் முஸ்லிம் லீக், கொங்குநாடு தேசிய மக்கள் கட்சி ஆகிய இருகட்சிகளுக்கு மட்டுமே ராமநாதபுரம், நாமக்கல் தொகுதி பங்கீடு செய்யப்பட்டு உள்ளது.

மற்ற கட்சிகளுடனான தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை இன்னும் முடிவுக்கு வரவில்லை. காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், ம.தி.மு.க. மற்றும் இடது சாரி கட்சிகள் கடந்த தேர்தலை விட இந்த தடவை கூடுதல் தொகுதிகள் கேட்பதால் அடுத்த கட்ட பேச்சுவார்த்தையை நடத்த முடிவு செய்துள்ளனர்.

காங்கிரஸ் கட்சியை பொறுத்தவரை கடந்த 2019 ம் ஆண்டு தேர்தலில் அந்த கட்சி கிருஷ்ணகிரி, தர்மபுரி, ஆரணி, திருவள்ளூர், கரூர், திருச்சி, கன்னியாகுமரி, சிவகங்கை, தேனி ஆகிய 9 தொகுதிகளில் போட்டியிட்டது. இதில் தேனி தொகுதியை தவிர மற்ற 8 தொகுதிகளில் வெற்றி பெற்றது.

இந்த தடவை தங்களுக்கு 12 தொகுதிகள் தரவேண்டும் என்று காங்கிரஸ் தரப்பில் வலியுறுத்தப்பட்டு உள்ளது. 3 வாரங்களுக்கு முன்பு தி.மு.க.காங்கிரஸ் தலைவர்கள் தொகுதி பங்கீடு சம்பந்தமாக சந்தித்து பேசியபோது 15 தொகுதிகள் கொண்ட பட்டியலை கொடுத்து அதில் 12 தொகுதிகளை ஒதுக்கி தர வேண்டும் என்று காங்கிரஸ் தலைவர்கள் கேட்டுக் கொண்டனர்.

ஆனால் இதை தி.மு.க. ஏற்கவில்லை. தமிழ்நாட்டிலும், புதுச்சேரியிலும் சேர்த்து மொத்தம் 8 தொகுதிகள் மட்டுமே தர இயலும் என்று தி.மு.க. தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து மீண்டும் சந்தித்து பேசலாம் என்று முடிவு செய்தனர்.

ஆனால் 3 வாரம் கடந்த நிலையில் தி.மு.க. காங்கிரஸ் தலைவர்கள் இன்னமும் 2வது கட்ட பேச்சுவார்த்தைக்கு உட்காரவில்லை. மற்ற தோழமை கட்சிகளுடன் தி.மு.க. தலைவர்கள் 2வது கட்ட பேச்சுவார்த்தையை நிறைவு செய்து விட்ட நிலையில் காங்கிரசுக்கு மட்டும் இன்னமும் அழைப்பு அனுப்பப்படவில்லை. இதன் காரணமாக தி.மு.க.காங்கிரஸ் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தையில் எதிர்பாராத தேக்கம் ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையே தமிழக காங்கிரஸ் தலைவர் பதவி மாற்றப்பட்டு புதிய தலைவராக செல்வபெருந்தகை பொறுப்பு ஏற்றதும் மீண்டும் பேச்சு வார்த்தையை தீவிரப்படுத்துவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தி.மு.க. தரப்பில் 8 தொகுதிகள் மட்டுமே தர இயலும் என்று திட்டவட்டமாக தெரிவிக்கப்பட்டதால் இந்த இழுபறியை முடிவுக்கு கொண்டு வர தமிழக காங்கிரஸ் தலைவர்கள் செல்வபெருந்தகை, ராஜேஷ்குமார், ரூபி மனோகரன் ஆகியோர் நேற்று முன்தினம் டெல்லிக்கு புறப்பட்டு சென்றனர்.

அவர்கள் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி மேலிட பொறுப்பாளர் அஜோய்குமாருடன் ஆலோசனை நடத்தினார்கள். பிறகு அஜோய்குமார், செல்வபெருந்தகை, ராஜேஷ்குமார், ரூபி மனோகரன் ஆகிய 4 பேரும் நேற்று மாலை 6.30 மணிக்கு அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவை சந்தித்து பேசினார்கள். சுமார் 3 மணி நேரத்துக்கு மேலாக அவர்களது ஆலோசனை கூட்டம் நீடித்தது.

கூட்டம் முடிந்ததும் நிருபர்களிடம் அஜோய்குமாரும், செல்வபெருந்தகையும் பேசுகையில், "தொகுதி பங்கீட்டில் எந்த பிரச்சினையும் இல்லை" என்று கூறினார்கள். ஆனால் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தையில் இழுபறி நீடிப்பது தெரிய வந்துள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் தி.மு.க.காங்கிரஸ் தொகுதி பங்கீட்டில் ஏற்பட்டுள்ள தேக்கத்துக்கு 3 விதமான பிரச்சினைகளே முக்கிய காரணங்களாக கூறப்படுகிறது. இந்த 3 முக்கிய பிரச்சினைகள் வருமாறு:

1. காங்கிரஸ் கேட்கும் 12 தொகுதிகளை தர இயலாது என்று தி.மு.க. உறுதிப்பட கூறி இருக்கிறது. 8 தொகுதிகள் மட்டுமே தர இயலும் என்று தெளிவுப்படுத்தி உள்ளது.

2. கடந்த தடவை போட்டியிட்ட தொகுதிகளில் சிலவற்றை இந்த தடவை தர இயலாது. சுழற்சி முறையில் இந்த தடவை வேறு தொகுதிகள் ஒதுக்கப்படும். அதை ஏற்க வேண்டும் என்று தி.மு.க. தரப்பில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அதை காங்கிரஸ் ஏற்க தயங்குகிறது.

3. கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யம் கட்சியையும் கூட்டணியில் சேர்க்க சம்மதித்து உள்ள தி.மு.க. கமல்ஹாசனுக்கான தொகுதியை காங்கிரஸ் ஒதுக்கி கொடுக்க வேண்டும் என்று கூறி உள்ளது. இது காங்கிரஸ் தலைவர்களை கூடுதல் நெருக்கடிக்கு உள்ளாக்கி இருக்கிறது.

இந்த 3 பிரச்சினைகளும் நாளுக்கு நாள் இடியாப்ப சிக்கலாகவே மாறி வருகிறது. உதாரணத்துக்கு தொகுதிகளை மாற்றுவதால் காங்கிரஸ் தலைவர்கள் தவிப்புக்குள்ளாகி இருப்பது தெரிய வந்துள்ளது. திருச்சி தொகுதியை துரை வைகோவுக்காக ம.தி.மு.க. கேட்கிறது. இதனால் அந்த தொகுதியில் வெற்றி பெற்ற காங்கிரஸ் எம்.பி. திருநாவுக்கரசர் ராமநாதபுரம் தொகுதியில் போட்டியிட முடிவு செய்தார்.

ஆனால் அதற்குள் ராமநாதபுரம் தொகுதி முஸ்லிம் லீக்குக்கு ஒதுக்கப்பட்டு விட்டது. அதுபோல கமல்ஹாசனுக்கு எந்த தொகுதி கொடுப்பது என்பதில் இதுவரை எந்த முடிவும் எட்டப்படவில்லை. இந்த தேக்கத்துக்கு யார் காரணம்? என்பது தி.மு.க.விலும், காங்கிரசிலும் தலைவர்கள் மட்டத்தில் புரியாத புதிராக இருந்து கொண்டு இருக்கிறது.

இந்த நிலையில் காங்கிரசுக்கு 5 தொகுதிகள் மட்டுமே தர இயலும் என்று தி.மு.க. புதிதாக உறுதி செய்யப்படாத ஒரு தகவலும் உலா வந்துக் கொண்டிருக்கிறது. இத்தகைய யூகங்களுக்கும், தேக்கத்துக்கும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமானால் தி.மு.க. தலைவர்களும், காங்கிரஸ் தலைவர்களும் மீண்டும் அமர்ந்து பேச வேண்டும். ஆனால் தி.மு.க. இதுவரை காங்கிரஸ் தலைவர்களை அழைக்கவில்லை என்று கூறப்படுகிறது.

அவர்கள் அழைக்காமல் நாம் எப்படி மீண்டும் செல்வது என்று காங்கிரஸ் தலைவர்கள் தடுமாற்றத்துடன் தயங்கி கொண்டு இருக்கிறார்கள். டெல்லி மேலிட காங்கிரஸ் தலைவர்களும் இந்த சூழ்நிலையை சற்று கவலையுடன் பார்க்கிறார்கள். நேற்று நடந்த ஆலோசனை கூட்டத்தில் கூட, "தி.மு.க. என்ன முடிவு செய்யும்? அடுத்து நாம் என்ன செய்ய வேண்டும்?" என்பது பற்றிதான் நீண்ட நேரம் விவாதம் செய்து இருக்கிறார்கள்.

கடைசியில் இன்னும் 2 நாட்கள் பொறுமையாக காத்திருக்கலாம். ஓரிரு நாட்களில் தி.மு.க.விடம் இருந்து நல்ல பதில் வரும் என்று டெல்லி மேலிட காங்கிரஸ் தலைவர்கள் நம்பிக்கையுடன் கூறியதாக தெரிகிறது. இதையடுத்து தமிழக காங்கிரஸ் தலைவர்கள் டெல்லியில் இருந்து நேற்று இரவே சென்னைக்கு புறப்பட்டு வந்துள்ளனர்.

அவர்கள் தி.மு.க.வுடன் மீண்டும் எப்போது பேசுவார்கள் என்பதுதான் அனைவரது எதிர்பார்ப்பாக உள்ளது. கடந்த 2014ம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலின்போது இதே மாதிரியான சூழ்நிலைதான் தி.மு.க.காங்கிரஸ் கட்சிகள் இடையே நிலவியது. அந்த சமயத்தில் மத்திய மந்திரியாக இருந்த ப.சிதம்பரத்தின் மீது தி.மு.க. தலைவர்கள் கடும் அதிருப்தியில் இருந்தனர்.

இதன் காரணமாகவே காங்கிரசுடன் பேச்சுவார்த்தையில் நீண்ட இழுபறி நீடித்தது. கடைசியில் காங்கிரசுடன் கூட்டணி இல்லை என்று அதிரடியாக தி.மு.க. அறிவித்தது. இதனால் வேறு வழியில்லாமல் அனைத்து தொகுதிகளிலும் தனித்து போட்டியிட்டு அனைத்து தொகுதிகளிலும் தோல்வியை தழுவியது.

மீண்டும் அத்தகைய நிலை ஏற்பட்டு விடக்கூடாது என்று தமிழக காங்கிரஸ் தலைவர்கள் மிகவும் கவலைப்படுகிறார்கள். எனவே தி.மு.க.வுடன் சுமூகமான தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தையை முடிக்க எதிர்பார்ப்புடன் உள்ளனர். சென்னையிலும், டெல்லியிலும் மாறி மாறி நடந்த ஆலோசனையில் இதுவரை எந்த உறுதியான முடிவும் எடுக்கப்படாத நிலையில் இந்த தேக்கத்துக்கு எப்போது விடை கிடைக்கும் என்ற கேள்விக்குறி தி.மு.க.காங்கிரஸ் இரு கட்சி நிர்வாகிகளிடமும் எழுந்து உள்ளது.

# திமுக அழியும் என சொன்னவர்கள் பலரும் காணாமல் போயுள்ளனர்: கனிமொழி



சென்னை, மார்ச். 1

சென்னைவிமானநிலையத்தில் கனிமொழி எம்.பி. செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

★ தேர்தல் நேரம் என்பதால் திட்டங்களை அறிவித்துள்ளார்கள்.

★ இதுவரை தமிழக முதலமைச்சர் வைத்த ஒரு கோரிக்கையை கூட மத்திய அரசு நிறைவேற்றவில்லை.

★ நல்ல திட்டங்களை திமுக எப்போதும் எதிர்ப்பதில்லை.

★ பிரதமர் வீடு கட்டும் திட்டத்தில் கால்வாசி தொகையை மட்டுமே மத்திய அரசு வழங்குகிறது.

★ திமுக அழியும் என சொன்னவர்கள் பலரும் காணாமல் போயுள்ளனர்.

★ குலசை ராக்கெட் ஏவுதளத்திற்கு நிலத்தை வழங்கியது மாநில அரசு தான்.

★ குலசை ராக்கெட் ஏவுதளம் தொடர்ந்து எங்களால் வலியுறுத்தப்பட்டு, அமைக்கப்பட்டுள்ளது.

★ எங்களது பெயரை சொல்ல கூட பிரதமருக்கு மனமில்லை.

★ முதல்வரின் கனவு திட்டம் என்பதால் நிகழ்ச்சியில் பங்கேற்றோம்.

★ அரசியல் வேறு, மதம் வேறு என்பதை உணர்ந்தவர்கள் தமிழக மக்கள்.

★ தமிழகத்தின் உரிமைகளுக்காக போராடும் இயக்கம் திமுக என்பதை மக்கள் அறிவர் என்று அவர் கூறினார்.

# தமிழகத்தில் தி.மு.க. இனி இருக்காது: எங்கு தேடினாலும் கிடைக்காது: பிரதமர் மோடி



நெல்லை, மார்ச்.1

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டையில் நடைபெற்ற பாஜக பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:

★ தமிழக மக்கள் பாஜகவின்பின்னேவரதொடங்கி உள்ளனர்.

★ பாஜக ஆட்சியில் தமிழகம் டெல்லிக்கு மிக அருகே வந்திருக்கிறது.

★ 5 ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்தில் 21 லட்சம் வீடுகளில் குழாய் மூலம் குடிநீர் வழங்கப்பட்டது. இன்று அது 1 கோடியாக உயர்ந்துள்ளது.

★ தமிழகத்தில் இன்று 40 லட்சம் மகளிருக்கு உஜ்வாலா எரிவாயு சிலிண்டர் கிடைக்கிறது.

★ உஜ்வாலா எரிவாயு சிலிண்டர் மூலம் தமிழக பெண்களின் வாழ்க்கை எளிதாகி உள்ளது. இதனால் எனக்கு தமிழகத்தில் பெண்களின் ஆதரவு அதிகரித்துள்ளது.

★ இன்று நாடு 100 அடி முன்னேறுகிறது என்றால், தமிழகமும் மிக வேகமாக 100 அடி முன்னேறும், இது மோடியின் உத்தரவாதம்.

★ தமிழகத்தில் 50 லட்சம் பேர் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் இலவச மருத்துவ உதவி பெறுகிறார்கள்.

★ மக்கள்விருப்பத்திற்கு எதிராக செயல்படும் மாநில அரசிடம் கணக்கு கேட்க வேண்டிய நேரம் இது.

★ உங்கள்குழந்தைகளின் எதிர்காலத்தை படுகுழியில் தள்ளிவிட்டார்கள்.

★ நான் இதை தொடர விட மாட்டேன். இது மோடியின் உத்தரவாதம்.

★ பல ஆண்டு காத்திருப்புக்கு பின் அயோத்தியில் குழந்தை ராமர் ஆலயம் அமைந்திருக்கிறது.

★ அயோத்தி ராமர் கோவில் பற்றி பாராளுமன்றத்தில் விவாதம் நடந்தபோது திமுக எம்.பி.க்கள் வெளிநடப்பு செய்தனர்.

★ காங்கிரசும், திமுகவும் நாட்டை பிரிக்கின்றன.

★ தமிழகத்தில் இருந்து ஒருவரை நாங்கள் பாராளுமன்ற உறுப்பினராக்கி உள்ளோம். அவரை ம.பி.யில் இருந்து தேர்வு செய்துள்ளோம்.

★ தமிழகத்தின் மீது அதிக அன்பு எங்களுக்கு இருக்கிறது.

★ கத்தாரில் இருந்து தண்டனை பெற்ற 8 முன்னாள் ராணுவ வீரர்களை இந்தியா அழைத்து வந்துள்ளோம்.

★ மத்திய அரசுக்கு மாநில அரசு ஒத்துழைப்பு கொடுப்பதில்லை. தவறானவர்களை திருத்த வேண்டிய நேரம் இது.

★ மோடியை மீறி இந்தியா மீது யாரும் கை வைக்க முடியாது.

★ தமிழகத்தில் தி.மு.க. இனி இருக்காது, எங்கு தேடினாலும்கிடைக்காது.

★ வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கு, வளர்ச்சியடைந்த தமிழகம் மிக அவசியம்.


★ நெல்லைசென்னை வந்தே பாரத் ரெயில் மூலம் வணிகம் பெருகி இருக்கிறது.

★நெல்லை,தூத்துக்குடி, விருதுநகர் ஆகிய இடங்களில் சூரிய மின்சக்தி திட்டங்கள் தொடங்கப்பட்டு உள்ளன.

★ வளர்ச்சி திட்டங்கள் தமிழகத்தில் மிக வேகமாக செயல்பட்டு வருகிறது.

★ விருதுநகரில் பிரதம மந்திரி ஜவுளி பூங்கா அமைக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

# ராக்கெட் ஏவுதளம் மின்னல் வேகத்தில் பணிகளை செய்தவர் எடப்பாடி பழனிச்சாமி



மதுரை, மார்ச். 1

மதுரை தனியார் கல்லூரியில் நேரு யுவகேந்திரா சார்பில் இளையோர் பாரதம் என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடந்தது. இதில் சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத்தலைவர் ஆர்.பி. உதயகுமார் நடுவராக பங்கேற்றார். அப்போது அவர் பேசியதாவது:

தூத்துக்குடி மாவட்டம் குலசேகரபட்டினத்தில் 2,200 ஏக்கரில் ராக்கெட் ஏவுதளம் அமைக்கப்படுகிறது இதற்காக பிரதமர் இன்று அடிக்கல் நாட்டியுள்ளார். விண்வெளி ஆராய்ச்சி துறையில் இந்தியா உலக நாடுகளில் முன்னணி நாடாக வேகமாக வளர்ந்து வருகிறது. சொந்தநாட்டுசிறப்புகளை மட்டுமின்றி பல்வேறு வெளிநாடு சேர்ந்த செயற்கைக் கோளையும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையமான இஸ்ரோ விண்ணில் செலுத்தி வருகிறது.

ஏற்கனவே ஸ்ரீஹரிகோட்டாவில் ஏவுதளத்தில் இருந்து இஸ்ரோ ராக்கெட் ஏவுகிறது. தற்போது தேவை அதிகரித்து இருந்ததால் வேறு இடங்களை தாண்டி அமைக்க முடிவு செய்தது. அப்போது பூகோள ரீதியாக ராக்கெட் ஏவுதளம் அமைக்க உகந்த இடமாக தூத்துக்குடி மாவட்டம் குலசேகரப்பட்டினம் கடற்கரை தேர்வானது.

அப்போது எடப்பாடியார் முதலமைச்சராக இருந்தார். நான் வருவாய்த் துறை அமைச்சராக இருந்தேன். இதற்கு தேவையான இடத்தை தருமாறு இஸ்ரோ சார்பில் தமிழக அரசுக்கு வேண்டுகோள் விடப்பட்டது. அதனைத் தொடர்ந்து அந்த பகுதியில் 2,223 ஏக்கர் நிலம் அடையாளம் காணப்பட்டது. அதனை கையகப்படுத்தும் பணியை தீவிரப்படுத்தி தனியாக மாவட்ட வருவாய் அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டார். மேலும் 8 வட்டாட்சியர்களும், தேவையான சர்வேர்களும் நிலம் எடுப்பு பணிகள் தீவிரமாக செய்து கொடுத்தனர்.

இந்த பணியினை அப்போதைய கலெக்டர் சந்தீப் நந்தூரி செய்து கொடுத்தார். இதற்காக நிலத்தை ஒதுக்கி கொடுத்ததற்காக நாங்கள் பெருமைப்படுகிறோம். மின்னல் வேகத்தில் நில ஆர்ஜித பணிக்கு எடப்பாடியார் அரசு அப்போது செயல்படுத்தி கொடுத்தது.

இவ்வாறு அவர் பேசினார்.

# வட்டார வளர்ச்சி அலுவலர் வீட்டில் லஞ்ச ஒழிப்பு துறையினர் சோதனை



தேவகோட்டை, மார்ச். 1

ராமநாதபுரம் பாரதிநகரை சேர்ந்தவர் முகமது சரீப் (வயது45). இவருக்கு சொந்தமாக கூரியூர் பகுதியில் நிலம் உள்ளது. இதனை வீட்டு மனைகளாக்கி விற்பனை செய்ய முடிவு செய்தார். இதற்காக ராமநாதபுரம் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர் சேவுக பெருமாளிடம் மனு செய்தார்.

அவர் 8 மனைகளுக்கு வளர்ச்சி கட்டணமாக ரூ.28 ஆயிரத்து 192 மற்றும் வரன்முறை படுத்துதல் கட்டணமாக ரூ.50 ஆயிரத்து 745 ராமநாதபுரம் பாரத ஸ்டேட் வங்கியில் பணம் செலுத்தி ரசீது கொண்டு வரும்படி கூறியுள்ளார்.

அதன்படி முஹம்மது ஷரீபும் பணத்தை கட்டி விட்டு ரசீதுடன் சென்றபோது சேவுகப்பெருமாள் ஒப்புதல் அளிக்க ரூ.60 ஆயிரம் லஞ்சம் கேட்டதாக தெரிகிறது. இதனால் அதிர்ச்சியடைந்த லஞ்ச ஒழிப்பு போலீசாரிடம் புகார் செய்தார்.

போலீசாரின் அறிவுரைப்படி லஞ்ச பணத்தை கொடுக்க முயன்றபோது சேவுகப்பெருமாளை லஞ்ச ஒழிப்பு போலீசார் கைது செய்தனர்.

கைதான அதிகாரி சேவுகப்பெருமாளின் வீடு சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை விவேகானந்தபுரம் பகுதியில் உள்ளது. நேற்று இரவு முதல் அவரது வீட்டிற்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. இன்று காலை அங்கு லஞ்ச ஒழிப்புதுறையினர் வருவாய்த்துறை முன்னிலையில் வீட்டில் சோதனை நடத்தினர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. சேவுகப்பெருமாள் வருகிற அக்டோபர் மாதம் பணியில் இருந்து ஓய்வு பெற இருப்பது குறிப்பிடத்தக்கது.

# விளவங்கோடு சட்டமன்ற தொகுதி 24ந்தேதி முதல் காலியாக உள்ளது: சபாநாயகரின் அறிவிப்பு அரசிதழில் வெளியீடு



சென்னை, மார்ச். 1

விளவங்கோடு தொகுதி எம்.எல்.ஏ.வாக இருந்த விஜயதாரணி பாரதிய ஜனதா கட்சிக்கு தாவியதால் தனது எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்திருந்தார்.

இந்த ராஜினாமா கடிதத்தை சபாநாயகர் அப்பாவு ஏற்றுக் கொண்டதாக அறிவித்திருந்தார்.

இதைத்தொடர்ந்து அந்த தொகுதி காலி இடமாக அறிவிக்கப்பட்டது.

சபாநாயகர் அப்பாவுவின் அறிவிப்பு தமிழ்நாடு அரசு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

அதில் இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் பிரிவு 190 (3) (பி)ன் கீழ் சட்டப்பேரவை விதிகளின்படி பிப்ரவரி 24 முதல் விளவங்கோடு தொகுதி காலியாக உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னதாக, 'திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி காலியாக இருக்கிறதா என சரியான நேரத்தில் அறிவிப்பு வெளியாகும்.

இந்த ஆட்சி சட்டத்தின் ஆட்சி. சட்டத்திற்குட்பட்டு சரியான நடவடிக்கை எடுத்து வருவதாக சபாநாயகர் அப்பாவு கூறியிருந்தார்.

# ராமேசுவரத்தில் பலத்த சூறைக்காற்று: மீனவர்கள் கடலுக்கு செல்ல



ராமேசுவரம், மார்ச். 1

வங்கக்கடல் மற்றும் மன்னார்வளைகுடாகடல் பகுதியில் 45 முதல் 65 கிலோ மீட்டர் வேகத்தில் சூறைக்காற்று வீசக்கூடும் என வானிலை மையம் அறிவித்துள்ளது. அதற்கேற்றாற் போல் ராமேசுவரம் கடல் பகுதி வழக்கத்தைவிட மாறுபட்ட நிலையில்காணப்பட்டது.

இதற்கிடையே மீனவர்களின் பாதுகாப்பு கருதி ராமேசுவரம், பாம்பன், மண்டபம் உள்ளிட்ட பகுதிகளில் மீனவர்கள் மீன்பிடிக்க செல்ல மறு அறிவிப்பு வரும் வரை மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக ராமேசுவரம், பாம்பன், மண்டபம் உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட விசைப்படகுகள் அந்தந்த துறைமுகங்களிலும், நடுக்கடலில் நங்கூரமிட்டும் நிறுத்தப்பட்டுள்ளது. 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் இன்று கடலுக்கு மீன்பிடிக்க செல்லவில்லை.

ராமேசுவரம் மீனவர்கள் 4 பேருக்கு இலங்கை அரசு சிறை தண்டனை விதித்ததை கண்டித்து காலவரையற்ற போராட்டத்தை தொடங்கிய நிலையில் குடும்பத்தினருடன் உண்ணாவிரத போராட்டத்திலும் ஈடுபட்டனர். இதையடுத்து ராமேசுவரத்தில் இருந்து கலெக்டர் அலுவலகம் நோக்கி நடைபயணம் சென்ற அவர்களிடம் கலெக்டர் நடத்திய பேச்சுவார்த்தையை ஏற்று மீனவர்கள் போராட்டத்தை கைவிட்டனர்.

8 நாட்களுக்கு பிறகு நேற்று முன்தினம் முதல் மீனவர்கள் கடலுக்கு சென்ற நிலையில் சூறைக்காற்று காரணமாக மீனவர்கள் கடலுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வேலையிழந்து உள்ளனர்.

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023


# ரஜினியின் அடுத்த படம்: தயாரிப்பாளர் யார் தெரியுமா?



இயக்குனர் ஞானவேல் இயக்கத்தில் உருவாகி வரும் வேட்டையன் படத்தில் ரஜினிகாந்த் தற்போது நடித்து வருகிறார். இந்த படத்தின் படப்பிடிப்பில் கலந்து கொள்ள ரஜினிகாந்த் சமீபத்தில் ஐதராபாத் புறப்பட்டு சென்றார்.

வேட்டையன் படத்தில் அமிதாப் பச்சன், பஹத் பாசில், ராணா டகுபதி, மஞ்சு வாரியர், ரித்திகா சிங், துஷாரா விஜயன் உள்ளிட்ட பலர் நடிக்கின்றனர்.

லைகா புரொடக்சன்ஸ் தயாரிக்கும் இந்த படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார்.

இந்த நிலையில், ரஜினி நடிக்கும் அடுத்த படம் தொடர்பான அறிவிப்பு வெளியாகி உள்ளது. பாலிவுட்டில் பிரபல இயக்குனரும், தயாரிப்பாளருமான சஜித் நதியத்வாலா ரஜினி நடிக்கும் அடுத்த படத்தை தயாரிக்க இருக்கிறார். இது தொடர்பான அறிவிப்பை அவர் தனது அதிகாரப்பூர்வ எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ளார்.

அதில், "ரஜினிகாந்த் உடன் இணைந்து பணியாற்ற இருப்பது உண்மையில் பெருமைக்குரிய விஷயம். இந்த மறக்க முடியாத பயணத்தை ஒன்றாக தொடங்குவதற்கு தயாராகும் போது எதிர்பார்ப்பு அதிகரிக்கிறது," என தெரிவித்துள்ளார்.


# நமது தினகனி

செய்திகள் மற்றும்

விளம்பரங்கள் தொடர்புக்கு:

86670 25357

94436 99066


# காதலரை மணக்கிறார் டாப்சி... திருமணம் எப்போ தெரியுமா?





தமிழில் ஆடுகளம் படத்தின் மூலம் அறிமுகமானவர் டாப்சி. இதைத் தொடர்ந்து இவர் காஞ்சனா 2, கேம் ஓவர் போன்ற படங்களில் நடித்தார். மேலும் பாலிவுட்டிலும் தொடர்ந்து நடித்து வருகிறார். கடந்த ஆண்டு டிசம்பரில் ஷாருக் கான் நடித்து வெளியான டங்கி படத்திலும் டாப்சி முக்கிய வேடத்தில் நடித்திருந்தார்.

இந்த நிலையில், டாப்சிக்கு விரைவில் திருமணம் நடைபெற இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. தனது நீண்டகால நண்பரும், பேட்மின்டன் வீரருமான மத்யாஸ் போ என்பவரை டாப்சி திருமணம் செய்து கொள்ள இருப்பதாக தெரிகிறது.

இருவரின் திருமணம் உதய்பூரில் பிரமாண்டமாக நடைபெற இருப்பதாகவும், இதில் இரு குடும்பத்தார் மற்றும் உறவினர்கள் மட்டும் கலந்து கொள்ள இருப்பதாகவும் கூறப்படுகிறது. இருவரின் திருணம் சீக்கிய மற்றும் கிறிஸ்துவ முறைப்படி நடைபெறும் என்றும் தகவல் வெளியாகி உள்ளது.

# ராயன் படத்தில் அடுத்தடுத்து இணையும் முக்கிய பிரபலங்கள்.. அடுத்தது யார் தெரியுமா?




சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்திற்கு, இசைப்புயல் ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைக்கிறார். காளிதாஸ்மற்றும்சந்தீப்கிஷன்உள்ளிட்டோர்இணைந்து நடிப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இதற்கிடையே, ராயன் படத்தில் நடிக்கும் முக்கிய கதாபாத்திரங்களை படக்குழு வெளியிட்டு வருகிறது. அந்த வகையில், ராயன் படத்தில் எஸ்.ஜே.சூர்யா, செல்வராகவன், பிரகாஷ் ராஜ், துஷாரா விஜயன், அபர்ணா பாலமுரளி, வரலட்சுமி உள்ளிட்டோர் நடிப்பதாக படக்குழு போஸ்டருடன்அறிவித்துவெளியிட்டது.இந்நிலையில், இவர்களை தொடர்ந்து ராயன் படத்தில் நடிகர் சரவணன் நடிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், சரவணனின் போஸ்டரை பட நிறுவனம் வெளியிட்டுள்ளது.

# ஐசிசி டெஸ்ட் தரவரிசை: இரண்டே போட்டியில் விளையாடி 31 இடங்கள் முன்னேறிய துருவ் ஜீரெல்




சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) வீரர்களுக்கான புதிய தரவரிசை பட்டியலை இன்று வெளியிட்டுள்ளது. அதில் டெஸ்ட் பேட்ஸ்மேன்கள் தரவரிசையில் இந்திய இளம் வீரர்களான கில், ஜெய்ஸ்வால் மற்றும் துருவ் ஜூரெல் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளனர். இங்கிலாந்துக்கு எதிராக நடைபெற்று வரும் டெஸ்ட் தொடரில் சிறப்பாக செயல்படுவதன் மூலம் ஏற்றம் கண்டுள்ளனர்.

இந்திய இளம் வீரர்களான ஜெய்ஸ்வால் 3 இடங்கள் முன்னேறி 12வது இடத்திலும் கில் 4 இடங்கள் முன்னேறி 31வது இடத்திலும் ஜூரெல் 31 இடங்கள் முன்னேறி 69வது இடத்திலும் உள்ளனர். ரோகித் ஒரு இடம் பின் தங்கி 13வது இடத்தில் இருக்கிறார். முதலிடத்தில் நியூசிலாந்து வீரர் வில்லியம்சன் தொடருகிறார். ரூட் 2 இடங்கள் முன்னேறி 3வது இடத்தை பிடித்துள்ளார். விராட் கோலி 2 இடங்கள் பின் தங்கி 9வது இடத்தில் இருக்கிறார். இந்திய அணி வீரர்கள் பொறுத்தவரை கோலி மட்டுமே டாப் 10 இடத்திற்குள் உள்ளார். டெஸ்ட் பந்து வீச்சாளர்கள் தரவரிசையில் பும்ரா முதலிடத்தில் தொடருகிறார். மற்றொரு இந்திய வீரரான அஸ்வின் 2வது இடத்தில் உள்ளார். குல்தீப் யாதவ் 10 இடங்கள் முன்னேறி 32வது இடத்தை பிடித்துள்ளார். டெஸ்ட் ஆல் ரவுண்டர்கள் தரவரிசையில் ஜடேஜா முதலிடத்திலும், அஸ்வின்2வதுஇடத்திலும்உள்ளனர்.இதில்ஜோ ரூட் 3 இடங்கள் முன்னேறி 4வது இடத்தில் உள்ளார். மற்ற தரவரிசைகளில் பெரிய அளவில் மாற்றம் ஏற்படவில்லை.

# அயர்லாந்துக்கு எதிரான டெஸ்ட்: 155 ரன்னில் சுருண்ட ஆப்கானிஸ்தான்

அயர்லாந்து ஆப்கானிஸ்தான் அணிகள் மோதும் ஒரே ஒரு டெஸ்ட் போட்டி இன்று தொடங்கியது. இதில் டாஸ் வென்ற ஆப்கானிஸ்தான் அணி முதல் பேட்டிங்கை தேர்வு செய்தது. அதன்படி தொடக்க வீரர்களாக இப்ராஹிம்சத்ரான்நூர்அலிசத்ரன்களமிறங்கினர்.

நூர் அலி சத்ரன் 7 ரன்னிலும் அடுத்து வந்த ரஹமத் 0 ரன்னிலும் அடுத்தடுத்து வெளியேறினார். இதனையடுத்து இப்ராஹிம் சத்ரான் ஷாஹிதி ஜோடி நிதானமாக விளையாடி ரன்களை சேர்த்தனர். இந்த ஜோடி 3வது விக்கெட்டுக்கு 50 ரன்கள் பாட்னர்ஷிப் அமைத்து கொடுத்தது.

20 ரன்கள் எடுத்த போது ஷாஹிதி அவுட் ஆனார். சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய இப்ராஹிம் சத்ரான் அரை சதம் விளாசி ஆட்டமிழந்தார். அடுத்து வந்த வீரர்கள் சொற்ப ரன்னில் வெளியேறினர். கடைசி வரை கரீம் ஜனத் ஆட்டமிழக்காமல் 41 ரன்கள் எடுத்தார்.

இறுதியில் ஆப்கானிஸ்தான் 54.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 155 ரன்கள் எடுத்தது. அயர்லாந்து தரப்பில் மார்க் அடேர் 5 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

இதனையடுத்து அயர்லாந்து அணி முதல் இன்னிங்சை ஆடியது. முதல் நாள் ஆட்ட நேர முடிவில் அயர்லாந்து அணி 4 விக்கெட்டுகளை இழந்து 100 ரன்கள் எடுத்தது. ஆப்கானிஸ்தான் தரப்பில்நவீத்சத்ரன்,ஜியாஉர்ரஹ்மான்ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.









Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.